தேனி நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் வீரவாள் கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் - ஒரு மாத காலத்திற்கு

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை சிறப்பாக கொண்டாடுவீர்!

அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள்

திண்டுக்கல், ஜூன் 17-

இந்தியாவே போற்றும் உன்னத தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவிவை திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் ஒரு மாத காலத்திற்கு திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்து திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ரவுண்டு ரோடு நாயுடு மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மேற்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் மோகன் தலைமை தாங்கினார். திண்டுக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான ஐ.பி.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. பேச்சு!

ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ.கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் பேசும்

போது நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வரலாறு காணாத அளவிற்கு வெற்றியை தேடித்தரும் அளவிற்கு அயராது உழைத்த திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு மாவட்டங்களை இரண்டாக பிரித்தாலும், கழக பணி மற்றும் தேர்தல் பணி உட்பட அனைத்து பணிகளிலும் ஒற்றுமையுடன் செயல்படும் திண்டுக்கல் மாவட்டம் திமுக நிர்வாகிகள் அனைவருக்கும் எனது அன்பான வேண்டுகோள் என்னவென்றால் சூன் 3ம் தேதி உலக தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர், திராவிட இயக்கத்தின் ஆணிவேர், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழகமே திரும்பி பார்க்கும் அளவிற்கு எழுச்சிமிகு விழாவாக கொண்டாட வேண்டும் என்றார்.

அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

அதன்பின்னர் கூட்டத்தில் பேசிய உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் உள்ள தி.மு.க.வினர் எழுச்சிமிகு விழாவாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாட வேண்டும்; என வேண்டுகோள் விடுத்தார். மத்தியில் இந்திய கூட்டணி தலைமையிலான ஆட்சி அமைந்தவுடன் தமிழகத்திற்கு எண்ணற்ற நலத்திட்டங்கள் கிடைக்கும். வரலாறு காணாத அளவிற்கு நலத்திட்ட பணிகள் நடைபெறும் என்றார்.

இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் கொண்டாடுவீர்!

இதையடுத்து பேசிய திமுக மாநில துணை பொதுசெயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி போது சூன் 3ம் தேதி முத்தமிழ் அறிஞரும், திராவிட இயக்கத்தின் ஆணிவேரும் உலகமே போற்றும் உன்னத தலைவருமான கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை தமிழகமே திரும்பி பார்க்கும் அளவிற்கு எழுச்சிமிகு விழாவாக திமுகவினர் கொண்டாட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். தலைமை கழகத்தால் அறிவிக்கப்படும் போராட்டமாக இருந்தாலும் சரி, பிறந்தநாள் விழாவாக இருந்தா லும் சரி, அதை யார் சிறப்பாக செய்கிறார்களோ அவர்கள் தான் கழகத்தில் நிலைத்திருக்க முடியும் என்றார். வருங்காலத்தில் இளைஞர்கள் கழகப்பணி ஆற்றும் அளவிற்கு அவர்கள் பணிகளை மூத்த நிர்வாகிகள் ஒதுக்கி தர வேண்டும் என்றதோடு நாம் கடந்த காலத்தில் எப்படி கழகத்திற்கு வந்தோம். இப்போது நாம கழகத்தில் எந்த நிலையில் உள்ளோம். கழகத்தால் நாம் அடைந்த உயர்நிலையை ஒவ்வொரு நிர்வாகிகளும் உணர்ந்தால நமக்குள் எந்தவொரு கருத்து வேறுபாடும் இருக்காது. ஒற்றுமை உணர்வு தான் ஏற்படும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் வளரும் என்றார். கழக பணியாற்றாமல் இருக்கும் ஒருவரை கட்சி பதவியில் அமரவைத்தால் அவரால் கட்சிக்கு எந்த பயனும் கிடையாது. உண்மையாக உழைப்பவர்களுக்கு கட்சி பதவிகள் கொடுத்தால் கழகம் வளருவதோடு நீண்ட காலத்திற்கு கழகம் நிலைத்திருக்கும் நிலைமை உருவாகும் என்றதோடு நாம் அனைவரும் கலைஞர் வழியில் வந்த கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழியில் நடந்து ஒற்றுமையுடன் கழக பணியாற்றினால் தான் நாம் வரும் அனைத்து தேர்தலிலும் வெற்றி பெற முடியும் என்றார்.

நிகழ்ச்சியில் தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபானி, ஆத்தூர் நடராஜன், மாநில வர்த்தகரணி இணை செயலாளர் ஜெயன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட துணைச்செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்க்கிரேட் மேரி, பிலால் உசேன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட திமுக பொருளாளர் சாணார்பட்டி விஜயன், துணை செயலாளர்கள் ராஜாமணி, தாமரை செல்வி, சுந்தர்ராஜன், ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், வீரா சாமி நாதன், கவிதா பார்த்திபன், ஒட்டன்சத்திர நகர செயலாளர் வெள்ளைச்சாமி, திண்டுக்கல் மாநகர மேயர் இளமதிஜோதி பிரகாஷ், துணை மேயர் இராஜப்பா, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், துணை அமைப்பாளர்கள் ப.ராஜேஸ்பெருமாள், மாயக்கண்ணன், மணலூர் மணிகண்டன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.அஸ்வின் பிரபாகரன், துணை அமைப்பாளர்கள் குட்டி (எ)துரைப்பாண்டி, முத்துக்குமார், ஒன்றிய பெருந்தலைவர்கள் ரெட்டியார்சத்திரம் ப.க.சிவகுரு சாமி, ஆத்தூர் மகேஸ்வரி முருகேசன், திண்டுக்கல் ஒன்றிய பெருந்தலைவர் ராஜா, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, பிள்ளையார்நத்தம் முருகேசன், பாறைப்பட்டி ராமன், நிலக்கோட்டை மணிகண்டன், சௌந்தரபாண்டி, கொடைக்கானல் கருமலை பாண்டி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், மணி, மாவட்ட வர்த்தக ரணி அமைப்பாளர் பொன் முருகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் சி.ஜானகிராமன், அ.இராஜேந்திரகுமார், மா.சந்திர சேகரன், திண்டுக்கல் மேற்கு பகுதி செயலாளர் ப.பஜுலுல்ஹக், திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், பேரூர் கழக செயலாளர்கள் ஸ்ரீராமபுரம் ராஜா, கன்னிவாடி இளங்கோவன், சின்னாளபட்டி மோகன்ராஜ், சித்தையன்கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், பேரூராட்சி மன்ற தலைவர்கள் சின்னாளபட்டி பிரதீபா கனகராஜ், கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் சகிலாராஜா, அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் மணி என்ற நந்தகோபால், திமுக நிர்வாகி அம்பை ரவி, மற்றும்; ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் புதுக்கோட்டை ரமேஷ், அருளானந்தம், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுமதி கணேசன், ஜஸ்டின் மைக்கேலம்மாள், தமிழ்ச்செல்வி முத்துக்கிருஷ்ணன், சாதிக், செல்வி காங்கேயன், வண்ணம்பட்டி காணிக்கைராஜ், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், மலைச்சாமி, டென்னிஸ், மாமன்ற உறுப்பினர்கள் திமுக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், இளைஞரணியினர், மகளிரணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. வழக்கறிஞர் அணி

மாநில நிர்வாகிகள் கூட்டம்!

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (17-06-2024 - திங்கட்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள "தி.மு.க. சட்டத்துறை அறையில்" எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : வழக்கறிஞர் அணி செயல்பாடுகள் குறித்து

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 14.6.2024

என்.ஆர்.இளங்கோ, எம்.பி.
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை.

நெல்லை மாநகர தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. நெல்லை சந்திப்பு த.மு. சாலையில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு,பொதுமக்களுக்கு அறுசுவை உணவு,12ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு கைபேசி ஆகியவை வழங்கும் நிகழ்வு தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்வில் நமச்சிவாயம்,அன்டன் செல்லத்துரை,அலிஃப் மீரான், அப்துல்கையூம்,வேங்கை வெங்கடேஷ்,ஜவகர்,ஸ்டார் முருகன்,சிவா,ராபர்ட் செல்லையா,ராஜ்,கேபிள் குமரேசன்,கிங்பாலா உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மாரியப்பன் ஏற்பாட்டில் ஸ்ரீ காந்திமதிஅம்மன் அன்பு இல்லத்தில் மாணவிகளுக்கு காலை,மதியம்,இரவு ஆகிய மூன்று வேளை உணவுகளை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் வழங்கினார். நிகழ்வில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன்,மாணவர் அணி அமைப்பாளர் கல்லூரி பாலா, மானூர் தெற்கு ஒன்றிய பொருளாளர் மகாராஜன், கிளைச் செயலாளர்கள் மேலவாசி,அர்ஜுன பாண்டியன், லட்சுமணன்,ஐயப்பன், சொக்கலிங்கம், அர்ஜுனன், நெல்லை மணி,மாரிமுத்து உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

பூ. சுப்பிரமணியன் தலைமையில் - முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாணவர்களுக்கு கைபேசி!

மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் வழங்கினார்!

நெல்லை, ஜூன் 17-

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.அதன்படி நெல்லை சந்திப்பு த.மு.சாலையில் வைத்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தல்,பொதுமக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்தல் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களின் மேற்படிப்பிற்கு கைபேசி(செல்போன்) ஆகியவை வழங்கும் நிகழ்வு தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது. இதன் மூலம் ஏழை, எளிய, மக்கள் மாணவ, மாணவியர்கள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர்.

அதன்படி தொடர் நிகழ்ச்சியாக நெல்லை சந்திப்பு த.மு.சாலையில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு, பொதுமக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவரின் மேற்படிப்புக்காக கைபேசி(செல்போன்) ஆகியவற்றை வழங்கும் நிகழ்வு தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் பங்கேற்று கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தியும்,பொதுமக்களுக்கு அறுசுவை உணவு களை வழங்கி,மாணவர்களுக்கு கைபேசி ஆகிய வற்றை வழங்கியும் துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான், மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ்,ஜவகர்,தச்சை பகுதி துணைச் செயலாளர் ஸ்டார் முருகன், மாநகர பிரதிநிதி சிவா, வட்ட செயலாளர் ராபர்ட் செல்லையா, ராஜ்,கேபிள் குமரேசன்,கிங்பாலா,மாநகர நிர்வாகிகள் ஷெட்டி,சித்திக்,மகாராஜன், வின் சென்ட் வினோத், போஸ், அருண் மணிகண்டன், அருள்ராஜ்,எல்.ஐ.சி பேச்சிமுத்து,தமிழரசன்,செந்தில் குமார், கணேசன் பெருமாள், சுப்ரித் சுப்பிரமணியன்,அந்தோணி ராஜ், சார்லஸ் முத்துராஜ்,வினோத், கோபாலகிருஷ்ணன்,சங்கர், கிருஷ்ணகுமார்,முத்து சுப்பிரமணியன், உமர், மைக் மணி,மார்க்கெட் நயினார், பத்மா,சௌந்தரம் முத்துராஜ்,மேரி உலகராஜ், பிந்து செய்யது,ராஜேஸ்வரி, ஆனி ரேக்லண்ட், நர்மதா திலக், சுடலைக் கண்ணு,சங்கர் கணேஷ், முருகன்,மில் ஜே.குமார், ராஜா அப்பாஸ், சாதிக்,பாபநாசம்,அன்னராஜா,ஐயப்பன், கார்த்திக் உட்பட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் செய்திருந்தார்.

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர்101வது பிறந்தநாளை முன்னிட்டு பேருந்து நிலையம் முன்பாக தலைவர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு நகர்கழகச் செயலாளரும் நகர்மன்றத் தலைவருமான சி.எம்.துரை.ஆனந்த் தலைமையில் மாவட்ட துணைச்செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவாணிகணேசன் உட்பட நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நெல்லை கணபதி ராமசுப்பையா
ஜூன் 17 (2006)

கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஓ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.

மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.

தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் 'தனது தலைவர் கலைஞர்தான்' என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.